23.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கல்லாறு வனப் பகுதியில் அரியவகை வண்ணத்துப் பூச்சி



மேட்டுப்பாளையத்தை அடுத்த கல்லாறு வனப் பகுதியில் "ஆர்கிட்' வகையைச் சேர்ந்த சிறிய வண்ணத்துப் பூச்சி கண்டுபிடிக்கப்பட்டது. மேட்டுப்பாளையத்திலிருந்து குன்னூர் செல்லும் மலைப்பாதையில் அமைந்துள்ள கல்லாறு வனப்பகுதி. நீலகிரி மலையடிவாரத்தில் அரிய வகை தாவரங்களையும், பறவைகளையும், பூச்சி வகைகளையும் கொண்ட இந்த வனப்பகுதிக்கு, வன ஆர்வலர்களும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பினரும் ஆய்வுக்காக வருவது வழக்கம்.

இந்த நிலையில், நீலகிரி மற்றும் ராஜபாளையம் பகுதி வண்ணத்துப் பூச்சி சங்கங்களைச் சேர்ந்த 10-க்கும் மேற்பட்டோர் கொண்ட குழு வண்ணத்துப் பூச்சிகளைத் தேடி கல்லாறு வனப்பகுதிக்குள் கடந்த திங்கள்கிழமை சென்றது.

அப்போது, வனப்பகுதியில் மிக அரிதாகந்க் காணப்படும் சிறிய வகை ஆர்கிட் வண்ணத்துப் பூச்சியை குழுவினர் கண்டு வியப்படைந்தனர். இதுகுறித்து ராஜபாளையம் சந்தோஷ் கூறியதாவது:

ஆர்கிட் வகை செடி என்பது உயரமான மரங்களின் மேலே ஒட்டுண்ணியாக படர்ந்து வாழும் தன்மை கொண்டது. அதேபோல ஆர்கிட் வகையைச் சேர்ந்த இந்த அரிய வகை வண்ணத்துப் பூச்சியும் உயரமான மரங்களின் மேற்பகுதியில் ஆர்கிட் மலர் வளரும் பகுதியில் வாழும் தன்மை கொண்டது. இந்த சிறிய வகை வண்ணத்துப் பூச்சியின் இறகு 24 மி.மீ. முதல் 27 மி.மீ அளவு நீளம் கொண்டது. ஆண் வண்ணத்துப் பூச்சி வெளிர் நீலம் மற்றும் கருப்பு கலந்த வண்ணத்திலும், பெண் வண்ணத்துப் பூச்சி பழுப்பு, வெள்ளையும் கலந்த வண்ணத்திலும் காணப்படும்.

தமிழகத்தில் முதல்முதலாக திருநெல்வேலி மாவட்டத்தில் கேரள வன எல்லையருகே இந்த வண்ணத்துப் பூச்சி இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து கல்லாறு வனப்பகுதியில் இருப்பது தற்போது தெரிய வந்துள்ளது என்றார்.

## இயற்கை சாகுபடியில் 7 அடி உயரம் வளர்ந்த புடலங்காய்



பெரம்பலூர் அருகே, இயற்கை சாகுபடி முறையில் சுமார் 7 அடி உயரமுள்ள (226 செ.மீட்டர்) புடலங்காய் சாகுபடி செய்துள்ளார் பட்டதாரி இளைஞர் க.விக்ரம். பெரம்பலூர் அருகேயுள்ள கீழக்கணவாய் கிராமத்தை சேர்ந்தவர் கண்ணன் (65). விவசாயி. இவரது மகன் விக்ரம் (37). எம்.எஸ்சி, எம்.ஏ படித்துள்ள இவர், பெங்களூருவில் உள்ள தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வந்தார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு, தனது வேலையை விட்டு, சொந்த கிராமத்துக்கு வந்த விக்ரம் தனது தந்தைக்கு உதவியாக விவசாயப் பணிகளில் ஈடுபட்டு வந்தார். இந்த நிலையில், இயற்கை சாகுபடியில் ஆர்வமுள்ள விக்ரம் தங்களின் 7 ஏக்கர் நிலத்தில், இயற்கை முறையில் சாகுபடி செய்ய முயற்சித்து வருகிறார். அதன்படி, தனது விவசாய நிலத்துக்கு வாகை இயற்கை பண்ணை என்று பெயரிட்டு கீரை வகைகள், நெல், கத்திரி, பந்தல் சாகுபடியில் பீர்க்கங்காய், பாகற்காய், புடலங்காய், அவரை உள்ளிட்ட பல்வேறு வகையான காய்கறிகளை இயற்கை முறையில் சாகுபடி செய்து வருகிறார்.

தற்போது, அவரது வயலில் சாகுபடி செய்யப்பட்டுள்ள புடலங்காய் 226 செ.மீட்டர் நீளத்துக்கு வளர்ந்துள்ளது. மேலும், அதன் வளர்ச்சி உள்ளதால், அதனருகே குழி தோண்டி அதனுள் புடலங்காயை வளரச்செய்துள்ளார். இதுகுறித்து விக்ரமின் தந்தை கண்ணன் கூறியதாவது:

கடந்த சில மாதங்களாக எனது மகனின் முயற்சியால் இயற்கை சாகுபடியில் ஈடுபட்டு வருகிறோம். தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள புடலங்காய்களில் 5-க்கும் மேற்பட்ட புடலங்காய் 226 செ.மீட்டர் நீளம் வளர்ந்துள்ளன. 2010-ஆம் ஆண்டு எங்கள் தோட்டத்தில் வளர்ந்த 188 செ.மீட்டர் நீளமுள்ள புடலங்காயும், 2013-ஆம் ஆண்டில் வளர்ந்த 252 செ.மீ நீளமுள்ள புடலங்காயும் மிகப்பெரிய புடலங்காய் என கருதப்பட்டது. இந்நிலையில், தற்போது, வளர்ந்துள்ள இந்த புடலங்காய் 226 செ.மீட்டர் நீளம் வளர்ந்துள்ளது என்றார் அவர்.

## கூடுதல் மகசூல் பெற சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கலாம்: வேளாண் துறை

கூடுதல் மகசூல் பெற விவசாயிகள் பிரதமரின் விவசாய பாசன மேம்பாட்டுத் திட்டக்கின் கீழ் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கலாம் என்று வேளாண்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, மாவட்ட வேளாண் இணை இயக்குநர் பெ.ஹரிதாஸ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடலூர் மாவட்டக்தில் 47,000 ஆழ்குழாய்க் கிணறுகள் உள்ளன. நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து வரும் நிலையில் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்ய, நீரை சிக்கனமாகப் பயன்படுத்த சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசன முறைகளை கையாள வேண்டும்.

நெற்பயிரைப் பொறுத்தவரை சராசரி 110 நாள் சாகுபடி காலத்திற்கு 1250 மி.லி. நீர் தேவை. கரும்பு பயிருக்கு 360 நாள்களுக்கு 2200 மி.லி, தென்னைக்கு நாள்தோறும் 200 லிட்டர் நீர் தேவை.

சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதன் மூலம் கரும்புக்கு 1000 மி.லி, தென்னைக்கு நாள்தோறும் 75 முதல் 100 லிட்டர் மட்டுமே தேவைப்படும். சொட்டுநீர்ப் பாசனம் செய்வதால் பெருமளவு நீர் மிச்சமாவதுடன், களைகளின் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டு 33 சதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கிறது.

சொட்டு நீர்ப்பாசனத்தை பொறுத்த வரை கரும்பு, தென்னை, எண்ணெய் பனை ஆகிய பயிர்களுக்கு சிறு குறு விவசாயிகளுக்கு 100 சத மானியத்திலும், இதர

விவசாயிகளுக்கு 75 சத மானியத்திலும் அமைத்துத் தரப்படுகிறது. இதற்காக விவசாயிகள் அருகிலுள்ள வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

**தரமான விதைகளை தேர்வு செய்வதன் மூலம் துவரை உற்பத்தியை அதிகரிக்க முடியும்**



தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றி தரமான துவரை விதைகளை உற்பத்தி செய்தால், விளைச்சலை அதிகப்படுத்தி விவசாயிகள் கூடுதல் லாபம் பெறமுடியும் என, திண்டுக்கல் மாவட்ட விதைச் சான்று உதவி இயக்குநர் பெ.விஜயராணி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளது: ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள உணவு மற்றும் விவசாய அமைப்பு, 2016 ஆம் ஆண்டை உலக பயறு ஆண்டாக அறிவித்துள்ளது. அதன்படி, இந்தியாவிலும் பயறு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அதிக அளவில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது. துவரை சாகுபடி செய்வதற்கான நிலம் தேர்ந்தெடுத்தல், உரமிடுதல், கலவன் அகற்றுதல் போன்ற நடைமுறைகளைப் பின்பற்றினால், உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

தரமான விதைகள் என்பது, தன்னுடைய இனத் தூய்மையில் சிறிதும் குன்றாமல், களை விதை, பிற ரக விதை, நோய் தாக்குதல் விதை இல்லாமல் இருக்கவேண்டும். மேலும், தரமான விதை அதிக வீரியத்துடனும், முளைப்பு திறன் அதிகமாகவும் இருக்கும். இதனால், தரமான செடிகளின் எண்ணிக்கையை பராமரிக்க முடியும்.

பயறு வகை விதைப் பண்ணைகளுக்கு மானியம்: பயறு வகை விதைப் பண்ணை அமைக்கும் விவசாயிகளுக்கு மத்திய-மாநில அரசுகள் சார்பில், உற்பத்தி மற்றும் விநியோக மானியம் வழங்கப்படுகிறது. விதைப் பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள், அரசுக்கு வழங்க வேண்டுமெனில், தங்கள் பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**வடக்கே ஒரு நம்மாழ்வார்!**



வேளாண் புரட்சியை நாடு முழுவதும் முன்னெடுத்துச் செல்பவர். விவசாயிகளுக்கு அரணாக விளங்குபவர். நமது நாட்டின் வேப்பமரம், கோதுமை, பாஸ்மதி அரிசி

போன்றவற்றுக்கு போராடி காப்புரிமையை பெற்றுத் தந்தவர். அவர்தான் சுற்றுச்சூழல் ஆர்வலர் வந்தனா சிவா (63).

தமிழகத்தில் நம்மாழ்வார் போல, வடஇந்தியாவில் வந்தனா சிவா, இயற்கை வேளாண் புரட்சியை முன்னெடுத்துச் சென்று வருகிறார். உத்தரகண்ட் மாநிலம், டேராடூனில் பிறந்த வந்தனா சிவா, இயற்பியல் ஆய்வாளராக தனது பணியைத் தொடங்கினார். அதன்பிறகு இயற்கை வேளாண்மைக்கு ஆதரவாக அவர் முன்னெடுத்துச் சென்ற போராட்டங்கள் ஏராளம். இயற்கை விவசாயத்தை வலியுறுத்தும் வகையில் விதை வங்கியை தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தளி கிராமத்தில் தொடங்கினார் வந்தனா சிவா. இதன்பிறகு நாடு முழுவதும் பல்வேறு விதை வங்கிகளைத் தொடங்கினார்.

இதே போன்று 2004-இல் சுனாமியின் போது தமிழகத்தில் விவசாயிகள் பாதிக்கப்பட்ட போது, தமிழகத்தின் நம்மாழ்வார் உடன் இணைந்து வந்தனா சிவாவும், நாகையில் தங்கி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். அப்போது விளைநிலங்களில் தேங்கிய கடல்நீரை அகற்றியும், மாற்று விதைகள் அளித்தும் உதவினார். இதுதவிர மரபணு மாற்று விதையைப் பயன்படுத்தி கத்திரிக்காய் உற்பத்தி செய்வதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து பல போராட்டங்களிலும், கருத்தரங்குகளிலும் பங்கேற்றுள்ளார்.

மேலும், திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் பகுதியில் கோலா நிறுவனம் சார்பில் அமைக்கப்பட உள்ள தொழிற்சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து, விவசாய அமைப்புகளுடன் இணைந்து கடந்த ஆண்டு போராட்டம் நடத்தினார். அவற்றின் பின்னணி குறித்து அவர் நம்மிடம் பகிர்ந்து கொண்டவை:

இயற்கை வேளாண்மை மீது எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?

1984 -ஆம் ஆண்டு....இந்தியாவில் இரு சம்பவங்கள் நிகழ்ந்தன. போபாலில் ரசாயன நிறுவனத்தில் விஷவாயு கசிந்து, பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்த சம்பவம் ஒன்று. மற்றொன்று, பஞ்சாபில் சீக்கியர்களுக்கு எதிரான கலவரம். ஆனால், இதை மதக் கலவரமாக மட்டும் நம்மால் கருத முடியாது. காரணம், அப்போது பல்லாயிரக்கணக்கான விவசாயிகளும் பாதிக்கப்பட்டனர். இந்த இரு சம்பவங்களும் இந்தியச் சுற்றுச்சூழல் மீதும், வேளாண்மையின் மீதும் என் பார்வையை விழச் செய்தன.

வேம்பு, பாஸ்மதி அரிசி போன்றவற்றுக்கு காப்புரிமை பெற போராடியது ஏன்?
அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள், இந்தியா போன்ற வளரும் நாடுகள் மீது உணவு, உணவு கலாசாரம் மூலம் தாக்குதலைத் தொடுத்து வருகின்றன. இதில் ஒன்றே, பயோ-பைரஸி (உயிர்ம சார்ந்த திருட்டு). நம் நாட்டில் தொன்றுதொட்டு பயன்பாட்டில் இருந்து வரும் வேளாண் வளங்களை, மரபணுவில் சிறிது மாற்றம் செய்து, தங்கள் நாட்டின் கண்டுபிடிப்பு என குறிப்பிட்டு, காப்புரிமை பெறும் முயற்சிகளில் பல வெளிநாட்டு ரசாயன நிறுவனங்கள் ஈடுபட்டதை அறிந்தேன். இவற்றில் வேம்பு, கோதுமை, பாஸ்மதி அரிசி போன்றவையும் அடங்கும்.

நமது நாட்டில் விவசாயிகள், தொன்றுதொட்டு விளைவித்து வரும் இவற்றுக்கு வெளிநாட்டினர் எவ்வாறு காப்புரிமை பெற முடியும்? மரபணுவில் சிறிது மாற்றம் செய்தால், தாங்கள் கண்டுபிடித்ததாக அர்த்தமாகி விடுமா..? இதை எதிர்த்துப் போராடி, நம் நாட்டிற்கே அவற்றின் காப்புரிமையை பெற்றுத் தந்தேன். நமது விதைகள் பற்றியும், அவற்றின் பயன்கள் குறித்தும் விவசாயிகள் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் இதுபோன்ற பிரச்னைகளுக்குத் தீர்வு ஏற்படும்.

விவசாயிகளிடம் இயற்கை வேளாண்மை பற்றிய தாக்கம் எவ்வாறு உள்ளது?
உலகமயமாக்கல் கொள்கையால் மற்ற துறைகள் வேகமாக முன்னேறி வந்தாலும், விவசாயிகள் ஈட்டும் வருவாய் மிகவும் சொற்பமானதாக இருந்து வருகிறது. இதற்கு காரணம் உரம், பூச்சிக்கொல்லி மருந்து போன்றவற்றின் விலை கட்டுக்கடங்காத வகையில் உயர்ந்து வருவதே. ஆனால், இயற்கை வேளாண்மையைப் பின்பற்றி வரும் விவசாயிகள் வாழ்க்கைத் தரம், ஏனைய விவசாயிகளின் நிலையைவிட ஏற்றம் பெற்றுள்ளதைக் கண்கூடாக பார்க்க முடிகிறது. விவசாயிகளுக்கு உறுதுணையாக இருந்து வரும் நாங்கள் (நவதான்யா) இதுவரை ஒரு லட்சத்துக்கும் மேலான விவசாயிகளை, இயற்கை வேளாண்மைக்கு உள்படுத்தியுள்ளோம். இன்னும் ஐந்து ஆண்டுகளில் மேலும் ஒரு லட்சம் விவசாயிகளை இயற்கை வேளாண்மைக்கு மாற்ற இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

தற்போது பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசும், இயற்கை வேளாண்மையை ஊக்கப்படுத்தி வருகிறது. இதற்காக பல திட்டங்களையும் அறிவித்துள்ளது. இந்தியாவில் முதல்முறையாக "நவதான்யா' அமைப்பு தான்

இயற்கை வேளாண்மையால் விளைந்த பொருள்களை மக்களிடம் கொண்டு சேர்க்கிறது.

எனினும், நம் நாட்டில் விவசாயிகளின் தற்கொலை தொடர்ந்து நீடித்து வருகிறதே?

இதற்கு வேளாண்மையில் ஏற்பட்ட ரசாயன கலப்புதான் மூலகாரணம். இயற்கை அளிக்கும் மழைநீரில், 80 சதவீதத்தை உறிஞ்சும் தன்மை கொண்டவை நிலங்கள். ஆனால், ரசாயன கலப்பு காரணமாக தற்போது வேளாண் நிலங்கள், மட்டுமின்றி ஒட்டுமொத்த நிலங்களும் அவற்றின் தன்மையை இழந்துள்ளன. இதனால், போதிய விளைச்சல் இன்றி விளைநிலங்கள் அழிவதுடன், விவசாயிகளும் தற்கொலை செய்து கொள்ளும் நிலை உருவாகி உள்ளது. இதுதவிர ரியல் எஸ்டேட் தொழிலாலும் ஏரி, குளங்கள் போன்ற நீர் நிலைகளும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி உள்ளன. இது தவிர, அனைத்து மாநிலங்களிலும் நதிநீர் இணைப்பு பிரச்னை எழுந்துள்ளது. ஆனால், அதுமட்டுமே தீர்வாக அமையாது. நமது வேளாண் கலாசாரத்தை மாற்றியமைப்பதுடன், சரியான திட்டமிடல்களுடன் கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்துவதுதான் முழுமையான தீர்வாக அமையும்.

உங்களின் அடுத்தடுத்த போராட்டங்கள் பற்றி?

மேற்கத்திய நாடுகள், உணவை தற்போது ஆயுதமாக பயன்படுத்தி வருகின்றன. மெக் டொனால்டு, கேஎஃப்சி போன்ற பெரியநிறுவனங்கள் நம் நாட்டில் தங்களின் வணிகத்தை தொடங்கி உள்ளன. தென் மாநிலங்களில் ஒவ்வொரு ஊரிலும் ஒரு உணவு பதார்த்தங்கள் பிரபலமானவை. ஆனால், இதுபோன்ற பெருநிறுவனங்களின் வருகை காரணமாக அவை காலப்போக்கில் அழிவைச் சந்தித்து வருகின்றன. இதைக் கருத்தில் கொண்டு பாரம்பரிய உணவு கலாசாரத்தை மீட்டெடுக்கும் போராட்டத்தை தற்போது "நவதான்யா' அமைப்பு தொடங்கி உள்ளது. இதில் தமிழக மக்களும் பங்கேற்க வேண்டும்.

-ஆர்.எம். தினேஷ் படங்கள்: டி.ராமகிருஷ்ணன்

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பறவைகளை ஈர்க்கும் மரங்கள்

மரம் நடு விழாக்களில் அந்த இடத்திற்கே உரிய பாரம்பரிய மரங்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என சுற்றுச்சூழல் நிபுணர்கள் கூறுகின்றனர். தற்போது மரம் நடு விழாக்களில் விரைவில் வளரும் மரங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் தரப்படுகிறது.பறவைகளை ஈர்க்கும் மரங்கள் தான் காடுகளின் பரப்பளவு அதிகரிக்க காரணமாக உள்ளன. காற்று மாசுள்ள இடங்களில் ஆக்ஸிஜனை அதிக அளவில் வெளியிடும் அரசமரம், அகத்தி, புன்னை, மூங்கில் போன்றவற்றை நடவேண்டும். ஒலி மாசுள்ள இடங்களில் நெட்டிலிங்க மரம் சிறந்தது. நிழல் வேண்டுமெனில் வேப்பமரம் சிறந்தது.

### நுண்ணீர் பாசன பராமரிப்பு: விவசாயிகளுக்கு பயிற்சி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி வட்டாரத்தில், விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன மேலாண்மை குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியை வேளாண்மை உதவி இயக்குனர் ஜான்லூர்து சேவியர் துவக்கி வைத்து, நுண்ணீர் பாசனத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கம் அளித்தார். பயிற்சியின் போது, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் கீழ் இயங்கும் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட உதவியாளர் (வேளாண் பொறியியல்) முகமதுஇஸ்மாயில் பங்கேற்று, நுண்ணீர் பாசனத்தின் நன்மைகள் மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு, நுண்ணீர் பாசனத்தின் நன்மைகள் மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்த பயிற்சி கையேடு வழங்கப்பட்டது. பயிற்சியில் உதவி வேளாண்மை அலுவலர்கள், விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

## புதிய பயிர் காப்பீடு பயிற்சி கூட்டம்

டி.என்.,பாளையம்: டி.என்.,பாளையம் வட்டாரத்தில், புதிய பயிர் காப்பீட்டு திட்டம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குனர் சிதம்பரம், பயிர்களுக்கான பிரீமியம் தொகை, விண்ணப்பம் பெறும் முறை, இழப்பீடு தொகைக்கான மதிப்பீடு, திட்ட செயல்பாடு குறித்து பயிற்சி வழங்கினார். வேளாண் அலுவலர் சரோஜா, தோட்டக்கலைத்துறை அலுவலர் சுபாசினி பயிர் ஒதுக்கீடு, காப்பீட்டு திட்டத்தின் பங்களிப்பு, விவசாயிகளிடம் பெற வேண்டிய ஆவணங்கள் குறித்து பயிற்சி வழங்கினர்.

## 'தென்னக நதிகளை இணைப்பதே நதிநீர் பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வு'

ஈரோடு: 'தென்னக நதிகளை இணைப்பதே, நதிநீர் பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வாக அமையும்' என, மக்கள் சக்தி இயக்க பொதுச்செயலாளர் கோவிந்தராஜன் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசுக்கு, அவர் அனுப்பிய கடிதத்தில் கூறியதாவது: மக்கள் சக்தி இயக்கம் சார்பில், தென்னக நதிகள் இணைப்பை வலியுறுத்தி, கன்னியாகுமரி முதல் சென்னை வரை, 39 நாட்கள் எம்.எஸ்.உதயமூர்த்தி தலைமையில் பாதயாத்திரை சென்றோம். மத்திய அரசிடம் திட்டங்கள் குறித்து விளக்கி, நீர் பாசனத்துறை அமைச்சரிடம் மனு வழங்கினோம். கடந்த, 25 ஆண்டுகளாக தென்னக நதிகள் இணைப்புக்காக பல கருத்தரங்கு, மாநாடுகள் நடத்தி அரசிடம் வலியுறுத்தி வருகிறோம். தற்போது விஸ்வரூபம் எடுத்துள்ள காவிரி நதிநீர் பிரச்னையில், 'ஒரு சொட்டு தண்ணீரைக்கூட தமிழகத்துக்கு கொடுக்க மாட்டோம்' என, கர்நாடகா அரசு கூறுகிறது. இது முறையானது அல்ல; இந்திய இறையாண்மை, பண்பாட்டுக்கும் ஏற்புடையதல்ல. ஒடிஸாவில் மகாநதியில் ஆண்டு தோறும் வெள்ளப்பெருக்கால் பல கோடி ரூபாய் மதிப்புடைய பொருட்கள் வீணாகி, நிவாரணம் வழங்கப்படுகிறது. நூற்றுக்கணக்கான டி.எம்.சி., நீர் வீணாக கடலில் கலக்கிறது. ஆந்திராவில் கோதாவரி நதியில் ஆண்டு தோறும் வெள்ளச்சேதம் ஏற்பட்டு, மக்கள் மிகுந்த துன்பத்துக்கு ஆளாகின்றனர். மக்கள் வரிப்பணம்

வீணாகிறது. எனவே, மத்திய அரசு பெரும் முயற்சி எடுத்து, மாநில அரசுகளை அழைத்து சுமுகமாக பேசி, நதிகள் இணைப்பு, நதி நீர் பங்கீடு செய்ய வழி செய்ய வேண்டும். முதற்கட்டமாக தென்னக நதிகளை இணைப்பதே, இப்பகுதியில் உள்ள நதிநீர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வாகும். இவ்வாறு அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## இயற்கை விவசாயம் குறித்து பயிற்சி

கொடைக்கானல்: கொடைக்கானல் அருகே வில்பட்டி ஊராட்சி செம்மன்கவை பகுதியில் விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

மத்திய அரசின் திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் குறித்து பயிற்சி வழங்கும் வகையில் 50 ஏக்கர் நிலம் மற்றும் 50 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இயற்கை விவசாயம், பஞ்சகாவ்யம், தசகாவ்யம், மண்புழு உரம், நுண்ணுயிர்கள் கொண்டு உரம் தயாரிப்பது மற்றும் அதற்கான மானியம் பெறுவது குறித்த ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

பயிற்சியில் தோட்டக்கலைத்துறை அலுவலர் ஷைனி திவ்யா, உதவி அலுவலர் சரவணன், இயற்கை விவசாய ஆர்வலர் அப்துல் ஹமீது உட்பட பலர் பங்கேற்றனர். திரளான விவசாயிகள் ஆலோசனை பெற்றனர்.

## கண்மாய்களில் வண்டல் மண் அள்ள விவசாயிகளுக்கு அனுமதி:குறைதீர் கூட்டத்தில் அறிவிப்பு

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் டி.ஜி.வினய் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., பாஸ்கரன், வேளாண் துணை இயக்குனர்கள் தவமுனி, சுரேஷ் ஸ்ரீராம், வனப்பாதுகாப்பு அலுவலர் முருகன், செயற்பொறியாளர் ஜெயராம் பங்கேற்றனர்.

விவாதம் வருமாறு: அதிகாரி: இலவச கறவை மாடுகள், ஆடுகள் பெற, தேவையான விவசாயிகள் விண்ணப்பிக்கலாம். விவசாயி: கால்நடைகளுக்கு தேவையான தீவனங்கள் கிடைப்பதில்லை. அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

விவசாயி சுந்தர்ராஜ்: விவசாய வாய்க்கால், குளங்கள், முட்புதர்களால் மண்டிக் கிடக்கிறது. சிலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.

பொ.ப. அதிகாரி: பொதுப்பணித்துறை குளங்கள், கண்மாய்கள் தூர் வாரப்பட்டுள்ளன.

கலெக்டர்: விவசாயிகள் கேட்டுக் கொண்டதால், விரைவில் குளங்கள், கண்மாய்களில் வண்டல்மண் அள்ள அனுமதி வழங்கப்படும். ஒரு முறை பெற்ற அனுமதியைக் கொண்டு 5 லோடு மணல் அள்ளலாம்.

விவசாயிகள்: கூடுதலாக மண் அள்ள அனுமதி வழங்கி ஆணை வெளியிட வேண்டும்.

கனிம அதிகாரி: வண்டல் மண் கூடுதலாக தேவைப்படும் விவசாயிகள் அனுமதி பெற்று இன்னொரு முறை மண் அள்ளலாம்.

பொ.ப. அதிகாரி: பொதுப்பணித்துறையின் 110 கண்மாய்களில் மட்டுமே மண் அள்ள அனுமதி வழங்கப்படும்.

விவசாயி ராமன்: சிறு, குறு விவசாயிகளுக்கான சான்றிதழ் கூடுதலாக வழங்க வேண்டும். வேளாண், தோட்டக்கலைத் துறைகளில் மானியம், பிற உதவி பெற மாறி மாறி அலைந்து, தனித்தனியாக சான்றிதழ் வாங்க வேண்டியுள்ளது.

தோட்டக்கலை அதிகாரி: ஒரு விவசாயி ஒரு முறை விண்ணப்பித்து சான்றிதழ் வாங்கினால் போதும். ஒரிஜினல் சான்றிதழ் கொடுத்து உதவிக்கு விண்ணப்பிக்கலாம். மறுமுறை பிற உதவிகள் பெற நகலை கொடுத்தால் போதும். விரைவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

விவசாயி: சிறுமலை அடிவாரம் பகுதியில் காட்டு மாடு தொல்லை அதிகம் உள்ளது. பயிர்களை சேதப்படுத்துகின்றன. அவற்றை கட்டுப்படுத்த வேண்டும்.

வனப்பாதுகாவலர்: சோலார் வேலி அமைத்து தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயி: கூட்டுறவு சங்கங்களில் பயிர்க்கடன் தள்ளுபடிக்கு தகுதியான விவசாயிகளின் பெயர் பலகை வைக்கப்படுவதில்லை. இதனால் யாருக்கு தள்ளுபடி என்பதில் குழப்பம் ஏற்படுகிறது.

கூட்டுறவு அதிகாரி: எல்லா கூட்டுறவுகளிலும் தகுதியான விவசாயிகள் பெயரை வெளியிட உத்தரவிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 26,246 விவசாயிகள் பயிர்க்கடன் பெற தகுதியானவர்கள்.

விவசாயி: எத்தனை விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி செய்துள்ளனர். தள்ளுபடி சான்றிதழ் எத்தனை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளனர்.கூட்டுறவு அதிகாரி: இதுவரை பத்தாயிரம் பேருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கு இரண்டே நாட்களில் வழங்கப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

## நெல்லி, சப்போட்டா விலை உயர்வு:மகிழ்ச்சியில் விவசாயிகள்

போடி: மாவட்டத்தில் கடந்தாண்டைக்காட்டிலும் நெல்லி, சப்போட்டா விளைச்சல், விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தேனி மாவட்டத்தில் போடி, பெரியகுளம், ஆண்டிபட்டி, கம்பம் உட்பட பல பகுதிகளில் 6 ஆயிரம் எக்டேரில் 'மா' சாகுபடி நடக்கிறது. தரிசுநில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 'மா' பயிரிடும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் வரை மானியம் அரசு வழங்கி வருகிறது.

சீசன் காலங்களில் மாங்காய்களை வாங்கும் வியாபாரிகள் ரசாயன கற்கள் மூலம் அதனை பழுக்க வைக்கின்றனர். இதனை சாப்பிட்டால் உடல் நிலை பாதிக்கப்படும் என மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டதால் மாம்பழ விற்பனை பாதிக்கப்படுகிறது. இதோடு மழை மற்றும் சூறாவளி காற்றால் மாங்காய்கள் உதிர்வதும், பாதிக்கப்படுவதும் விவசாயிகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தி வருகின்றன.

ஆர்வம்: கடந்த 8 ஆண்டுக்கு முன் வரை 'மா' பயிரிட்டு வந்த விவசாயிகள் பலர் இதன் தொடர்ச்சியாக நெல்லி, சப்போட்டா பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதில் மருந்து அடிப்பது, களை எடுப்பது, அதிக அளவு வேலைப்பழு கிடையாது. சப்போட்டாவில் நல்ல விளைச்சல் இருப்பதால் விவசாயிகளிடத்தில் வியாபாரிகள் கிலோ ரூ.6 முதல் ரூ. 8 வரை கொள்முதல் செய்கின்றனர். தரம் பிரித்த பின் சில்லரையில் கிலோ ரூ.12 முதல் ரூ. 20 வரை விற்கின்றனர்.

இதே போல நெல்லி பயிரிட்ட விவசாயிகளுக்கும் போதுமான அளவு விளைச்சல் உள்ளதால், விவசாயிகளிடத்தில் வியாபாரிகள் கிலோ ரூ. 25 முதல் ரூ. 30 வரை கொள்முதல் செய்கின்றனர்.

தரம் பிரித்து கிலோ ரூ.35 முதல் ரூ. 50 வரை விற்பனை செய்கின்றனர். சில்லரையில் ஒரு நெல்லி ரூ. 4 ரூபாய் ரூ. 5 வரை விற்கின்றனர். கடந்தாண்டைக்காட்டிலும் நெல்லி கிலோ ரூ.10, சப்போட்டா ரூ. 2 விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.-

## பயறு வகை பயிர்களின் உற்பத்தி பெருக்குதல் பயிற்சி

மல்லசமுத்திரம்: திருச்செங்கோடு தாலுகா, மல்லசமுத்திரம் வட்டார விவசாயிகளுக்கு, வேளாண்மை துறை மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம் இணைந்து, பச்சை பயறு சாகுபடி குறித்து பயிற்சி வழங்கப்பட்டது. மல்லசமுத்திரம் வேளாண் உதவி இயக்குனர் சண்முகம், பயறு வகை பயிர்களில் விதை உற்பத்தி செய்தல், சான்று பெற்ற விதைகளை பயன்படுத்துதலை பற்றி பேசினார். மல்லசமுத்திரம், ஒன்றிய குழு தலைவர் மோகன், உற்பத்தியை அதிகரிக்க அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பேசினார். மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மாணிக்கம், பச்சை பயறு சாகுபடியில் உயர் விளைச்சலுக்கான தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இதில், ஏராளமான விவசாயிகள் பஙகேற்றனர்.

## நிலக்கடலை விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்கள்

நாமகிரிப்பேட்டை: 'தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம் எண்ணெய்வித்து இயக்கத்தின் கீழ், நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, மானிய விலையில் பல்வேறு இடுபொருட்கள் வழங்கப்படவுள்ளன' என, நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அசோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில், கார்த்திகை பட்டத்தில், 300 ஹெக்டேர் பரப்பில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. நிலக்கடலையில், உற்பத்தியை அதிகப்படுத்திடவும், அதில், ஊடுபயிராக பயறுவகை சாகுபடி செய்யவும், வரப்பு பயிராக ஆமணக்கு சாகுபடி செய்யவும் விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்பட உள்ளன. பயறு வகையினை ஊடுபயிராக விதைப்பு செய்ய, ஒரு ஹெக்டருக்கு, 1,000 ரூபாய் பின்னேற்பு மானியமாகவும், நிலக்கடலையுடன் ஆமணக்கு வரப்பு பயிராக பயிரிடும் விவசாயிகளுக்கு, இரண்டு கிலோ ஆமணக்கு விதைகள், 50 சதவீத மானியத்திலும், திரவ உயிர் உரங்கள் ஒரு ஹெக்?டருக்கு, ஒரு லிட்டர், 50 சதவீத மானியத்திலும் வழங்கப்படவுள்ளன. மேலும், விவரங்களுக்கு,

நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## நீர் பாசன பயிற்சி முகாம்: விவசாயிகள் பங்கேற்பு

திருச்செங்கோடு: எலச்சிபாளையம் ஒன்றியம், கொன்னையார் கிராமத்தில், வேளாண்துறை சார்பில், நீர் மேலாண்மை மற்றும் நுண்ணீர் பாசன அமைப்பு, பராமரிப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது. உழவர் பயிற்சி நிலையம் வேளாண் துணை இயக்குனர் சுப்பையா சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசன முறைகள் குறித்து பேசினார். எலச்சிபாளையம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் (பொ) சத்திய பிரகாஷ், வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் மத்திய, மாநில அரசு திட்டங்களை விளக்கினார். வேளாண் உதவி இயக்குனர் (மாவட்ட நீர் மேலாண்மை முகமை) சவுந்தரராஜன் நிலத்தடி நீரை மேம்படுத்துதல், பண்ணைகுட்டை அமைத்தல், மழைநீர் சேகரிப்பு மற்றும் கோடை உழவு செய்வதால் ஏற்படும் பயன்கள் போன்ற தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தார். நல்லாம்பாளையம் அகரம், இலுப்பிலி, கோக்கலை கிராம விவசாயிகள், நாமக்கல் வேளாண் அறிவியல் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## அரசு தோட்டக்கலையில் மிளகு, பலா செடிகள் தயார்

நாமக்கல்: 'கொல்லிமலை வட்டாரம் செம்மேடு, படசோலை ஆகிய பகுதிகளில் உள்ள அரசு தோட்டக்கலைப்பண்ணைகளில் மிளகு, பலா உள்ளிட்ட செடிகள் விற்பனைக்கு உள்ளன' என, நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஆசியா மரியம் தெரிவித்துள்ளார் .

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: செம்மேடு, படசோலை பகுதியில் உள்ள அரசு தோட்டக்கலைப்பண்ணைகளில் மிளகு குச்சிகள், ஆறு ரூபாய் விலையில், 25 ஆயிரத்து, 521 குச்சிகளும், சில்வர் ஓக் நாற்றுகள், ஐந்து ரூபாய் விலையில், 74 ஆயிரத்து,137 செடிகளும் விற்பனைக்கு உள்ளன. மேலும், 148 அன்னாசி சிறு கன்றுகள், ஏழு ரூபாய்; 72 ஆயிரத்து, 901 காபி நாற்றுகள், தலா, ஏழு ரூபாய்; 215 கொய்யா செடிகள் தலா, 25 ரூபாய்; 269 பலா ஒட்டுச்செடிகள், தலா, 30 ரூபாய்க்கும் விற்பனைக்கு தயாராக உள்ளன. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பச்சை பயறு சாகுபடி பயிற்சி

சேந்தமங்கலம்: புதுச்சத்திரத்தில் பச்சை பயறு சாகுபடி பயிற்சி நடந்தது. புதுச்சத்திரம் வேளாண்மைத் துறை மற்றும் ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம் இணைந்து வேளாண் சிறப்பு கருத்தரங்கினை புதுசத்திரத்தில் நடத்தியது. நிகழ்ச்சிக்கு புதுச்சத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வரதராஜ் தலைமை வகித்தார். நாமக்கல் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் லோகநாத பிரகாசம் கலந்து கொண்டு பயறு வகை பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல், பச்சை பயறு சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். பேராசிரியர் வெங்கடாசலம், உதவி பேராசிரியர் கதிர்வேல் உள்ளிட்டோர் பயிற்சி அறித்தனர். இந்த கருத்தரங்கில் சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

## அரசு தோட்டக்கலை பண்ணைகளில் குறைந்த விலையில் செடிகள் விற்பனை : விவசாயிகளுக்கு அழைப்பு

நாமக்கல்: நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை வட்டாரம் செம்மேடு, படசோலை அரசு தோட்டக்கலை பண்ணைகளில் சில்வர்ஒக், காபி, பலா, மிளகு உள்ளிட்ட பல்வேறு நடவுப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்ய தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கலெக்டர் ஆசியாமரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை வட்டாரத்தில் உள்ள செம்மேடு மற்றும் படசோலை அரசு தோட்டக்கலை பண்ணைகளில் மிளகு, சில்வர்ஓக், அன்னாசி, காபி, கொய்யா, பலா ஆகிய நடவு பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது.

செம்மேடு அரசு தோட்டக்கலை பண்ணைகளில், 15,471 மிளகு வேர்க்குச்சிகள், 35,471 சில்வர் ஓக் நாற்றுகள், 98 அன்னாசி சிறு கன்றுகள், 43,486 காபி நாற்றுகள், 215 கொய்யா பதியன்கள், 269 பலா ஒட்டு செடிகள் இருப்பில் உள்ளன. அதேபோல், படசோலை அரசு தோட்டக்கலை பண்ணைகளில் 25,521 மிளகு வேர் குச்சிகளும், 38,666 சில்வர் ஓக் நாற்றுகள், 50 அன்னாசி சிறுகன்றுகள், 29,415 காபி கன்று செடிகளும் இருப்பில் உள்ளன.மிளகு வேர் குச்சிகள் ரூ.6க்கும், சில்வர் ஒக் நாற்றுகள் ரூ.5க்கும், அன்னாசி சிறுகன்றுகள் ரூ.7க்கும், காபி

கன்றுகள் ரூ.6க்கும், கொய்யா பதியன்கள் ரூ.25க்கும், பலா ஒட்டு செடிகள் ரூ.30க்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. நாமக்கல் மாவட்ட விவசாயிகள் தங்களுக்கு தேவையான, தரமான நடவுப்பொருட்களை அரசு தோட்டக்கலை பண்ணைகளில் பெற்று பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**காவிரி பிரச்னையால் தர்மபுரி பட்டுக்கூடு அங்காடிக்கு வரத்து அதிகரிப்பு**

தர்மபுரி: பட்டு வளர்ச்சித்துறை சார்பில், தர்மபுரி நகரில் பட்டுக்கூடு ஏல அங்காடி செயல்பட்டு வருகிறது. இந்த அங்காடிக்கு தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், தினமும் 3 டன் பட்டுக்கூடுகளை ஏலத்திற்கு கொண்டு வருகின்றனர். வழக்கமாக ஈரோடு மாவட்டத்தில் இருந்து பட்டுக்கூடு கர்நாடக மாநிலம் நஞ்சன்கூடு பகுதிக்கு செல்லும். காவிரி பிரச்னையில் கர்நாடக மாநிலத்தில் போராட்டம் நடந்து வருவதால், ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் பகுதியில் இருந்து தர்மபுரிக்கு அதிகளவில் பட்டுக்கூடுகளை விற்பனைக்காக கொண்டு வருகின்றனர்.

தமிழக கர்நாடகா எல்லையை ஒட்டியுள்ள கொள்ளேகால், சிட்லகண்டா, ராம்நகர் பகுதி விவசாயிகளும் பெங்களூருக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், அங்குள்ள விவசாயிகும் தர்மபுரி பட்டுக்கூடு ஏல அங்காடிக்கு வருவது அதிகரித்துள்ளது. நேற்று தர்மபுரி பட்டுக்கூடு அங்காடியில் நடைபெற்ற ஏலத்தில் 64 விவாயிகள் கலந்து கொண்டனர். மொத்தம் 4,800 கிலோ பட்டுக்கூடு விற்பனைக்காக கொண்டு வரப்பட்டிருந்தது. வெண் பட்டுக்கூடு அதிகபட்சமாக கிலோ ரூ.424, சராசரியாக ரூ.351.40க்கு விற்பனை செய்யப்பட்டது. மஞ்சள் பட்டுக்கூடு அதிகபட்சமாக ரூ.307, சராசரியாக ரூ.272க்கு விற்பனையானது.

**காவிரி பிரச்னை எதிரொலி : ஆயுத பூஜைக்கு முன்னதாகவே சாம்பல் பூசணி அறுவடை தீவிரம்**

தர்மபுரி: கர்நாடகாவில் காவிரி பிரச்னை எதிரொலியாக ஆயுத பூஜைக்கு முன்னதாகவே தர்மபுரி மாவட்டத்தில் சாம்பல் பூசணி அறுவடை தீவிரமடைந்துள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் சுமார் 400 ஏக்கரில் சாம்பல் பூசணி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக பாலக்கோடு, மொரப்பூர், கோபிநாதம்பட்டி, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட இடங்களில் அதிகளவில்

சாம்பல் பூசணியை சாகுபடி செய்துள்ளனர். சாகுபடி செய்த 65 நாட்களில் சாம்பல் பூசணி அறுவடைக்கு வரும். ஏக்கருக்கு 15 டன் முதல் 20 டன் வரை மகசூல் கிடைக்கிறது.

ஆயுதபூஜை மற்றும் சரஸ்வதி பூஜையை எதிர்நோக்கி சாகுபடி செய்யப்பட்ட சாம்பல் பூசணி காவிரி பிரச்னையால் முன்னதாகவே அறுவடை செய்யப்பட்டு வருகிறது. காவிரி நீர் பங்கீடு தொடர்பான விவகாரத்தில் இரு மாநிலங்களுக்கு இடையே கடந்த 17 நாட்களாக போக்குவரத்து முடங்கியுள்ளது. இதனால், பெங்களூர் சந்தைக்கு காய்கறிகள் கொண்டு செல்வது தடைபட்டுள்ளது. வரும் 10ம் தேதி நாடு முழுவதும் கொண்டாடப்படும் ஆயுதப்பூஜை அன்றும் இதே நிலைதான் இருக்கும் என கருதி சாம்பல் பூசணியை அறுவடை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். தோட்டத்திலேயே ஒரு கிலோ ரூ.4க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதுகுறித்து விவசாயி பூபதி (65) கூறியதாவது: ஆயுத பூஜையை எதிர்நோக்கி சாம்பல் பூசணி சாகுபடி செய்துள்ளோம். தற்போது, காவிரி பிரச்னையால் கர்நாடகாவிற்கு போக்குவரத்து முடங்கியுள்ளது. பண்டிகையின்போது அனைவரும் ஒரே சமயத்தில் அறுவடை செய்தால் விற்பனையில் பாதிப்பு ஏற்படும். அதனை கருத்தில் கொண்டு தற்போதே அறுவடை பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

## வேப்பனஹள்ளி அருகே நுண்ணீர் பாசனம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி அருகே நுண்ணீர் பாசனத்தின் நன்மைகள் மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத்துறை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின்கீழ் காரகுப்பம் பகுதி விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன மேலாண்மை குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. இந்த பயிற்சியினை வேளாண்மை உதவி இயக்குநர் ஜான்லூர்து சேவியர் தொடங்கி வைத்து, நுண்ணீர் பாசனத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கம் அளித்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சின்னசாமி வரவேற்புரையாற்றினார். இந்த பயிற்சியின் போது, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின்கீழ் இயங்கும் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட உதவியாளர் (வேளாண் பொறியியல்) முகமது இஸ்மாயில் பங்கேற்று, நுண்ணீர் பாசனத்தின் நன்மைகள் மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனத்தின் நன்மைகள் மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்த பயிற்சி கையேடு வழங்கப்பட்டது. அத்துடன் இந்த பயிற்சியில் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் கலந்துகொண்டு வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தனர்.

# தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ரூ.3.31 கோடிக்கு தேயிலை தூள் விற்பனை

கோவை, கோவை தேயிலை வர்த்தக மையத்தில் இந்த வாரத்திற்கான ஏலம் நேற்று முன்தினம் மாலை நடந்தது. இதில் உள்ளூர் ரகம் (டஸ்ட்) 2.38 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 2.16 லட்சம் கிலோ விற்பனையானது. சராசரி விற்பனை விலை கிலோ ரூ.103.03. விற்பனை மதிப்பு ரூ.2.23 கோடி. ஏற்றுமதி ரகம் (லீப்) 1.22 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. 1.15 லட்சம் கிலோ விற்பனையானது. 68 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.94.49. விற்பனை மதிப்பு ரூ.1.08 கோடி. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் ரூ.3.31 கோடிக்கு விற்றுள்ளது.

**பூ விலை குறைந்தது**

கோவை, : கோவையில் உள்ள மொத்த பூ மார்க்கெட்டிற்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து தினசரி பூ வகைகள் வருகிறது. இங்கிருந்து, கோவை மற்றும் மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும் பூ சப்ளையாகிறது. கேரளாவில் கடந்த 5ம் தேதி முதல் 14ம் தேதி வரை ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்டது. அதைத்தொடர்ந்து அங்கு 16 நாள் சதய தினம் பூஜை நடந்தது. பூ வகைகள் படைக்கப்பட்டு, சிறப்பு வழிபாடு நடந்தது. இதற்காக கோவையில் இருந்து தினசரி சராசரியாக 40 டன் பூ கேரளாவிற்கு சென்றது. இந்நாட்களில் கோவையில் பூ விலை 2 முதல் 3 மடங்கு உயர்ந்தது. தற்போது ஓணம் பண்டிகை முடிந்து, கேரளாவிற்கு செல்லும் பூ சப்ளை 95 சதவீதம் குறைந்தது. இதனால், பூ விலை இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. கோவை பூ மார்க்கெட்டில் நேற்றைய பூ விலை விவரம் : கிலோ அளவில் (அடைப்பு குறிக்குள் முந்தைய விலை) :

செண்டுமல்லி (ஆரஞ்சு), செண்டுமல்லி (மஞ்சள்) - ரூ.10 (50), ரோஜா (சாதா) 100 எண்ணிக்கை - ரூ.40 (80), இதர ரோஜாக்கள் - ரூ.80 (160), சம்பங்கி - ரூ.30 (250), மல்லி, முல்லை, ஜாதிப்பூ - ரூ.140 (650), பட்டுப்பூ - ரூ.30 (120), செவ்வந்தி - ரூ.50 (100), அரளி - ரூ.40 (150), துளசி - ரூ.30 (40), மருகு கட்டு - ரூ.4 (5), மரிக்கொழுந்து கட்டு - ரூ.4 (10). இதில் மல்லி, முல்லை, ஜாதிப்பூ கிலோவுக்கு ரூ.410 குறைந்துள்ளது. மற்ற பூக்களின் விலை ஒன்றரை மடங்கு வரை குறைந்துள்ளது.

**இரண்டாம் சீசனுக்காக தாவரவியல் பூங்காவில் மலர் அலங்கார பணி துவக்கம்**

ஊட்டி, :இரண்டாம் சீசனுக்கான தாவரவியல் பூங்காவில் தொட்டிகளில் நடவு செய்யப்பட்ட மலர் செடிகளை அலங்கரிக்கும் பணி நேற்று துவங்கியது. செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் நீலகிரி மாவட்டத்தில் இரண்டாம் சீசன் கடைபிடிக்கப்படுகிறது. சீசன் துவங்கிய நிலையில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் புதிதாக மலர் செடி நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது 3 லட்சம் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன. மேலும், 10 ஆயிரம்

தொட்டிகளில் மேரிகோல்டு, பேன்சி, பெட்டூனியா உட்பட பல்வேறு வகையான மலர் செடிகள் நடவு செய்யப்பட்டிருந்தன.

தற்போது அனைத்து செடிகளிலும் மலர்கள் பூத்துள்ளது. சீசனை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் வருகை சற்று அதிகரித்துள்ளது. அடுத்த வாரம் முதல் காலாண்டு விடுமுறை, ஆயுத பூஜை விடுமுறை என அடுத்தடுத்து பள்ளிகளுக்கு தொடர் விடுமுறை வருவதால், சுற்றுலா பயணிகள் வருகை அதிகமாக இருக்கும். இந்நிலையில், சுற்றுலா பயணிகள் பார்வைக்காக மலர் தொட்டிகளை கொண்டு அலங்கார பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பூங்காவில் உள்ள மாடங்களில் மலர் தொட்டிகள் அடுக்கப்பட்டு வருகிறது.இன்னும் ஓரிரு நாட்களில் தொட்டிகள் அனைத்தும் மாடங்களில் அடுக்கும் பணி நிறைவடையும் என தெரிவிக்கப்பட்டது.

## மானிய விலையில் விவசாய கருவிகள்

திண்டுக்கல், : சாணார்பட்டி வட்டாரத்தில் விவசாயக் கருவிகள் மானியவிலையில் வழங்கப்பட உள்ளது.

இதில் பவர்டில்லர் சிறு, குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ.75 ஆயிரம் மானியத்திலும் இதர விவசாயிகளுக்கு ரூ.60ஆயிரம் மானியத்திலும் வழங்கப்படுகிறது. இதேபோல் விசைத் தெளிப்பானுக்கு ரூ.3ஆயிரம், பிவிசி.பைப்லைன், ஹெச்டிபிஇ பைப்லைன் ஆகியவை யூனிட் ஒன்றிற்கு ரூ.15 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது.

சாணார்பட்டி வட்டாரத்திற்கு தலா இரண்டு பவர்டில்லர், ரோட்டோவேடார், விசைத்தெளிப்பான், பிவிசி.பைப்லைன், ரோட்டோவேடார் தலா 5 யூனிட் பிவிசி. மற்றும் ஹெச்டிபிஇ. பைப்லைன் என மிக குறைவாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
எனவே விவசாயிகள் முன்னுரிமைப் பதிவேட்டில் பதிவு செய்த விவசாயிகள் உடன் தொடர்பு கொள்ளலாம். போட்டோ, ரேசன்கார்டு-சிட்டா-அடங்கல் நகல்கள், சிறப்பு மானியத்திற்கான சான்றிதழ் உள்ளிட்டவற்றையும் அளிக்க வேண்டும். குறைவான இலக்கு என்பதால் முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை

அளிக்கப்படும் என்று சாணார்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு இயந்திர விதைப்பு பயிற்சி

கமுதி, : கமுதி அருகே விவசாயிகளுக்கு வேளாண்மை நீர்பாசனத் திட்டத்தின் கீழ் நெல் இயந்திர விதைப்பு தொடர்பான கருத்தரங்கம் மற்றும் பயிற்சி நடைபெற்றது.கமுதி அருகே டி.வல்லக்குளம் கிராமத்தில் பிரதான் மந்திரி வேளாண்மை நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் நெல் இயந்திர விதைப்பு தொடர்பாக விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் கரத்தரங்கம் நடைபெற்றது.மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் சுப்பிரமணியன் சிறப்புரை ஆற்றினார்.விவசாயிகளுக்கு மானாவாரியில் நெல் மற்றும் சிறுதானியம், சாகுபடி செய்யும் போது கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்தும், நெல்லை விதைக்கும் முன்பு கடைபிடிக்க வேண்டிய நெல்விதை தேர்வு, உயிர் விதை நேர்த்தி, விதை கடினப்படுத்துதல் ஆகியவற்றை பற்றி கமுதி வேளாணமை உதவி இயக்குநர் (பொ) முகமது சித்திக் செயல் விளக்கம் அளித்தார்.நிகழ்ச்சியில் கூடுதல் இயக்குநர் முருகன் (ஓய்வு), வேளாண்மை துணை இயக்குநர் பிச்சை (ஓய்வு) மற்றும் டி.வல்லக்குளம் சுற்று வட்டார கிராமங்களில் இருந்து 130 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். ஏற்பாடுகளை கமுதி வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஈஸ்வரி, உதவி தொழில்நுட்ப மேலாளர் செல்வி பாரதீஸ்வரி செய்திருந்தனர்.